


கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தில் புறக்கடை கோழி வளர்ப்பு மூலம் கிராமப்புற மகளிர் சமூக பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக நடைபெற்ற திறன் மேம்பாட்டு பயிற்சி நிறைவு நாளில் பயிற்சி பெற்ற பெண்களுக்கு சான்றிதழ்களை பறக்கை, பயிற்சி கூடத்தில் (08.06.2016) அன்று வழங்கினார்.

செ.வெ.எண்: 340/2016 நாள்: 09.06.2016

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், "புறக்கடை கோழி வளர்ப்பு மூலம் கிராமப்புற மகளிர் சமூக பொருளாதாரத்தை மேம்படுத்துதல் - திறன் மேம்பாட்டு பயிற்சி" நிறைவு நாளில் பயிற்சி பெற்ற பெண்களுக்கு சான்றிதழ்களை வழங்கினார்கள்.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் மற்றும் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (தமிழ்நாடு) இணைந்து நடத்தும் "புறக்கடை கோழி வளர்ப்பு மூலம் கிராமப்புற மகளிர் சமூக பொருளாதாரத்தை மேம்படுத்துதல் - திறன் மேம்பாட்டு பயிற்சி" நிறைவு நாளில் பயிற்சி பெற்ற பெண்களுக்கு சான்றிதழ்களை வழங்கி, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், தெரிவித்ததாவது:-

நமது மாவட்டத்தில் உள்ள கிராமபுற மகளிர் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும்வகையில், புறக்கடை கோழி வளர்ப்பு பயிற்சி 3 நாட்கள் (06.06.2016 முதல் 08.06.2016 வரை) நடைபெற்றது. இப்பயிற்சியில் எவ்வாறு கோழி வளர்ப்பது, எவ்வாறு நோய் ஏற்படாமல் பாதுகாப்பது போன்ற அறிவுரைகள் வழங்கப்பட்டது. பயிற்சியில் வழங்கிய அறிவுரைகளை பின்பற்றி, கோழி வளர்ப்பு பண்ணையினை அமைத்து செயல்படுத்தினாலே மாதம் சுமார் ரூ. 10 ஆயிரம் வரை வருமானம் கிடைக்க வழிவகை செய்யும்.

மேலும் கோழி வளர்ப்பு பண்ணையினை அமைக்க ஏதேனும் விண்ணப்பம் பெறும்பட்சத்தில் தகுதியான நபர்களை தேர்ந்தெடுத்து, உரிய ஆவணங்களுடன் வங்கி கடன் கிடைக்க மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

நிகழ்ச்சியில் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி உதவிப் பொது மேலாளர் திரு. மார்டின் பிரகாசம், முன்னோடி வங்கி மேலாளர் திரு. விஸ்வநாதன், துணை இயக்குநர் (கால்நடை பராமரிப்புத்துறை மரு. பிண்டன் மிஸ்யர், உதவி இயக்குநர் மரு. ஆ. தயாசேகர், பயிற்சி ஒருங்கிணைப்பாளர் மற்றும் தலைவர் முனைவர் த. ரவிமுருகன், உதவிப் பேராசிரியர் முனைவர் மு. மதன்மோகன், இயக்குநர் (கிராமபுற சுய வேலைவாயப்பு பயிற்சி நிறுவனம், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி) திரு. ஆ. ராதாகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.